ஈரோட்டில் வேட்பாளர் கே.இ. பிரகாஷை ஆதரித்து பொதுமக்களிடம்

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தீவிர வாக்கு சேகரிப்பு!

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.03.2024) ஈரோடு மக்களவை தொகுதி கழக வேட்பாளர் பிரகாஷ் அவர்களுக்கு ஆதரவாக ஈரோடு மாவட்டம் சம்பத் நகர், உழவர் சந்தையில் வியாபாரிகள் மற்றும் பொது மக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் அமைச்சர் சு.முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.

ஈரோடு மாவட்டம் நேற்று (31.03.2024) சம்பத் நகர் நடைப்பயிற்சியின் போது கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களுடன் பொது மக்கள் மகிழ்ச்சியுடன் செல்ஃபி எடுத்துக் கொண்டனர். உடன் அமைச்சர்கள் முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ், ஈரோடு மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் பிரகாஷ் ஆகியோர் உள்ளனர்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.03.2024) ஈரோடு மக்களவை தொகுதி கழக வேட்பாளர் பிரகாஷ் அவர்களுக்கு ஆதரவாக ஈரோடு மாவட்டம் சம்பத் நகர், உழவர் சந்தையில் வியாபாரிகள் மற்றும் பொது மக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் அமைச்சர் சு.முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (31.03.2024) ஈரோடு மக்களவைத் தொகுதி கழக வேட்பாளர் பிரகாஷ் அவர்களுக்கு ஆதரவாக ஈரோடு மாவட்டம் சம்பத் நகர், உழவர் சந்தையில் வியாபாரிகள் மற்றும் பொது மக்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் அமைச்சர் சு.முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.

"பெண் சக்தி" என்று பேசுவதற்கு - பா.ஜ.க. ஆட்சிக்கு என்ன தகுதி, அருகதை இருக்கிறது?

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... - 4 ஆம் பக்கத் தொடர்ச்சி

உலகத் தொழிலாளர் அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட புள்ளிவிவரம் ஒன்றில், "வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது" என்று சுட்டிக் காட்டியிருக்கிறது. அதில், 83 விழுக்காடு இளைஞர்கள் வேலையின்றித் தவிப்பதாக வேதனையான செய்தியை வெளியிட்டிருக்கிறது. போலியான பிம்பங்களால் கட்டமைக்கப்பட்ட மோடி மாடல் இன்றைக்கு அம்பலப்பட்டு நிற்கிறது.

அதேசமயம், "எல்லோருக்கும் எல்லாம்" என்ற கொள்கையில் நாம் செயல்படுத்தி வரும் திராவிட மாடலில் தமிழ்நாடு எத்தகைய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதுவும், ஒன்றிய அரசின் புள்ளிவிவரம் ஒன்றை வைத்தே இதனை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பத்தாண்டுகளாக அ.தி.மு.க. ஆட்சி சீரழித்த தமிழ்நாட்டை மீட்டுக் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பல்வேறு தொழிற்சாலைகளைத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இதனால், வேலைவாய்ப்பைப் பெற்ற இளைஞர்கள் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தில் (EPF) அக்கவுண்ட் தொடங்கியிருக்கிறார்கள்.

இப்படி, கடந்த மூன்று ஆண்டுகளில் கிடைத்திருக்கும் வேலைவாய்ப்பு மட்டும் எவ்வளவு தெரியுமா? நமது அரசு பொறுப்பேற்ற இந்த மூன்று ஆண்டுகளில் 77 இலட்சத்து 78 ஆயிரத்து 999 புதிய வேலைவாய்ப்புகள் தனியார் துறைகளில் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று அந்தப் புள்ளி விவரம் சொல்கிறது. இப்படி திட்டங்களாலும் செயல்பாடுகளாலும் உண்மையாகவே சாதனைகளை நிகழ்த்தும் மாடல் தான் நமது "திராவிட மாடல்".

நான் சொல்வதை விட, தமிழ்நாட்டு மக்கள் என்ன கூறினார்கள் என்று ஒரு வீடியோ பார்த்தேன். அதில் ஒரு மகளிர் சொல்கிறார்: "எங்கள் வீட்டில், குழந்தைகளுக்கு உடம்பு சரியில்லையென்றால், காசிற்காக யாரையும் எதிர்பார்க்க வேண்டிய தேவை இனிமே இல்லை. எங்கள் அண்ணன் ஸ்டாலின் கொடுக்கும், தாய்வீட்டுச் சீர் மாதிரி 1000 ரூபாய் இருக்கிறது!" என்று மகிழ்ச்சியோட கூறுவதைப் பார்த்தேன். இப்படி சிரித்துக்கொண்டே ஒரு குழந்தை பேட்டி கொடுத்தது! எனக்குப் புல்லரித்துப் போய்விட்டது. அது போன்று தமிழ்நாடு முழுவதும் 16 இலட்சம் குழந்தைகள் காலை உணவுத் திட்டத்தில் சாப்பிடுகிறார்கள்!

அ.தி.மு.க. ஆட்சிதான் தமிழ்நாட்டின் இருண்ட காலம்!

மாதா மாதம், மாநிலம் முழுவதும் ஒரு கோடியே 15 இலட்சம் குடும்பங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்!

அடுத்து, "விடியல் பயணம்" திட்டம் பற்றிப் பேசுகிறார்கள்! "ஸ்டாலின் சார் பஸ்ல போயி நான்கு மாதம் இலவசமாகப் பயணம் செய்து கம்ப்யூட்டர் கோர்ஸ் முடித்து, இப்போது வேலைக்குச் செல்கிறேன்" என்று சகோதரி ஒருவர் மகிழ்ச்சியுடன் கூறினார், இது போன்று, மாநிலம் முழுவதும் இதுவரைக்கும் மகளிர் மட்டும், 445 கோடி முறை பயணம் செய்து இருக்கிறார்கள்!

அடுத்து, மாணவி ஒருவர் பேசுகிறார்! ஏழ்மையான சூழலில் அரசுப் பள்ளியில் படித்துக் கல்லூரிக்கு வந்த எனக்கு, அப்பா மாதிரி, ஸ்டாலின் அய்யா 1000 ரூபாய் தருகிறார் என்று கூறினார்! இப்படி மாநிலம் முழுவதும் 4 இலட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகள் புதுமைப் பெண் திட்டம் மூலமாகப் பயனடைகிறார்கள்!

அடுத்த வீடியோவில், "எப்போதாவதுதான் வீட்டில் சாப்பிடுவேன்... காலையில் அம்மா வேலைக்குச் சென்று விடுவார்கள்... நான் பள்ளிக்கு வந்துவிடுவேன்... இப்போது பள்ளியிலேயே ஸ்டாலின் தாத்தாவின் காலை உணவுத் திட்டத்தில் சாப்பிடுகிறேன்" என்று,

அதுமட்டுமல்ல, உழவர்களுக்கு இலவச மின் இணைப்புகள்,

மக்களைத் தேடி மருத்துவம்,

நான் முதல்வன் திட்டம்,

புதுமைப்பெண் திட்டம்,

தமிழ்ப்புதல்வன் திட்டம்,

இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48,

டீசல், கேஸ் விலை குறைக்கப்படும்!

சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சட்டங்கள் ரத்து செய்யப்படும்!

தொழிலாளர் விரோதச் சட்டங்கள், மறுசீரமைப்பு செய்யப்படும்!

ஜி.எஸ்.டி. சட்டத்தில் சீர்திருத்தம் செய்யப்படும்!

போலியான பிம்பங்களால் கட்டமைக்கப்பட்ட 'மோடி மாடல்' இன்றைக்கு அம்பலப்பட்டு நிற்கிறது!

இப்படி மூன்றே ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள எல்லா குடும்பத்திற்கும் பார்த்துப் பார்த்து அவர்கள் குடும்பத்தில் ஒருவனாகப் பல திட்டங்களைத் தீட்டி தருபவன்தான், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!

ஆனால், பத்தாண்டுகளாக இந்தியாவை ஆட்சி செய்த மோடியால் இப்படிப்பட்ட சாதனைகளைப் பட்டியலிட முடியுமா? தமிழ்நாட்டை ஆட்சி செய்த பாதம்தாங்கி பழனிசாமியால் தான் பட்டியலிட முடியுமா?

நாடாளுமன்றத் தேர்தலில்

நமது வாக்குறுதிகள்!

நம்முடைய திராவிட மாடல் அரசின் சாதனைகள் ஒன்றியத்திலும் தொடர வேண்டும் என்றுதான், சாதனைகளாக மாறப்போகும் வாக்குறுதிகளைத் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறோம். அதில் சிலவற்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்...

பத்தாண்டுகளாக சாமானிய மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்று சிறிதும் நினைத்துப் பார்க்காமல், மக்கள் விரோத பா.ஜ.க. அரசால் தொடர்ந்து உயர்த்தப்பட்ட பெட்ரோல்,

விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளிலும் வங்கிகளிலும் வாங்கியிருக்கும் கடனும் - வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்!

உழவர்களின் வேளாண் விளைபொருட்களுக்கு மொத்த உற்பத்திச் செலவுடன் ஐம்பது விழுக்காடு என்பதை வலியுறுத்திக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யப்படும்!

தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச் சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்!

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் வேலை நாட்கள் 100இல் இருந்து, 150 நாட்களாகவும் ஊதியம் 400 ரூபாயாகவும் உயர்த்தப்படும்!

மாணவர்களின் கல்விக் கடன் முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும்!

வங்கிகளில் மினிமம் பேலன்ஸ் இல்லாத போது விதிக்கப்படும் அபராதம் நீக்கப்படும்!

ஆலங்குப்பம் இரயில்வே சுரங்கப்பாதை மேம்பாலமாக மாற்றி அமைக்கப்படும்!

சேலம் விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்படும்! பன்னாட்டு விமான நிலையம் அமைக்கப் பரிசீலிக்கப்படும்!

சேலத்தில் 1000 ஏக்கர் பரப்பளவில் ஒரு புதிய தொழிற்பூங்கா அமைக்கப்படும்!

சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்படும்!

இது எல்லாவற்றிற்கும் மேல், முக்கியமாக, சாதிவாரிக் கணக்கெடுப்பும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்கள் குறித்த கணக்கெடுப்பும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரே நேரத்தில் ஒன்றிய அரசால் எடுக்கப்படும்!

இதெல்லாம் நிறைவேற, சேலம் நாடாளுமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வேட்பாளர் செல்வகணபதி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று சேலம் தொகுதி மக்களையும் கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி வேட்பாளர் மலையரசன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று கள்ளக்குறிச்சி தொகுதி மக்களையும் கேட்டுக் கொள்கிறேன்!

பா.ஜ.க. - அ.தி.மு.க.வை

ஒருசேர வீழ்த்துவோம்!

தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. - அவர்களோடு கூட்டணி வைத்திருக்கும் பா.ம.க. - தமிழ்நாட்டைப் பாழ்படுத்திய அ.தி.மு.க. இவர்கள் அனைவரையும் ஒருசேர வீழ்த்துங்கள்.

நீங்கள் அளிக்கும் வாக்கு இந்தியாவைக் காக்கட்டும்! தமிழ்நாட்டைக் காக்கட்டும்! உங்கள் எதிர்காலத் தலைமுறையைக் காக்கட்டும்!

பாசிசத்தை வீழ்த்த ஜனநாயகத்தைக் காக்க உங்கள் ஸ்டாலின் அழைக்கிறேன்!

நாற்பதும் நமதே! நாடும் நமதே! நாற்பதும் நமதே! நாடும் நமதே!

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.